**வேலூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை : க. முனுசாமி, எம்.ஏ., எம்.எஸ்.சி., எம்.பி.ஏ., பி.எட்., எம்.பில்.,**
**ந.க.எண்: 649 /மாஒ1/ஒபக/2022, நாள்: 10.05.2023**

பொருள்: "நான் முதல்வன்" – கல்லூரி கனவு – பள்ளிக் கவி துறை தமிழ்நாடு அரசு வழங்கும் அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டல் (Career Guidance Cell) / ஆலோசனை வழங்குதல் – 12 ஆம் வகுப்புகளில் தேர்ச்சி பெற்ற / பெறாத மாணவர்கள் தமது உயர்கல்வியை தொடரத் தகந்த வாய்ப்பை உருவாக்குதல் – அனைத்து நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்களுக்கு உணவு மற்றும் போக்குவரத்து செலவினத்திற்கான கட்டணம் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: தமிழ்நாடுபள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள், சென்னை-06 ந.க.எண்.ACE/118/ஆ3/CG-33/ஒபக/2023, நாள்:10.05.2023.

--------

"நான் முதல்வன்" – திட்டம் மாண்புமிகு முதல்வரால் கடந்த ஆண்டு மார்ச் 1 அன்று தொடங்கப்பட்டது. இத்திட்டத்தில் பள்ளிக் கல்வி துறையின் கீழ் இயக்கும் 71 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் உயர்கல்வி வழிகாட்டல் / ஆலோசனை வழங்குதல் தொடர்பான செயல்பாடுகளை நடைமுறைப்படுத்தப் பள்ளி அளவிலான உயர்கல்வி வழிகாட்டல் குழு (Career Guidance Cell) அமைத்துச் செயல்படுத்தப்பட்டுள்ளது. அக்குழுவின் ஒரு அங்கமாக ஒவ்வொரு அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் உள்ள நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்கள் இருக்கின்றார்கள். வேலூர் மாவட்டத்தில் இருக்கும் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு உயர்கல்விக்கு செல்வதற்கான விண்ணப்பங்களை பூர்த்தி செய்வதற்கும், உயர்கல்வி ஆலோசனைகள் வழங்குவதற்கும் பள்ளிகளுக்கு இந்நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்கள் செல்ல வேண்டியுள்ளது. கல்லூரி மாணவர்கள் பள்ளிகளுக்கு தன்னார்வலர்களாக செயல்பட உள்ளதாலும் மாணவ பருவத்தில் அவர்களின் சமூக சேவையை ஊக்குவிக்கும் பொருட்டும், பள்ளிகளுக்கு வரும் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட வேண்டும். அதுமட்டுமின்றி, அவர்களின் உணவு மற்றும் போக்குவரத்து செலவினத்திற்காக ஒரு நாளைக்கு ஒரு மாணவருக்கும் ரூபாய்.100 வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இதற்கான நிதியானது மாவட்ட திட்ட அலுவலகம் Samagra Shiksha மூலம் வழங்கப்படும். இப்பணியினை

மேற்கொள்ள அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
வேலூர் மாவட்டம் – 6.

**பெறுநர்:**

அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள், வேலூர் மாவட்டம்.

**நகல்:**

1. முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் மவாட்டம்
   அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது.
2. முதல்வர், DIET இராணிப்பேட்டை
   அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது.
3. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை), வேலூர் மாவட்டம்.
4. அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ) மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள், வேலூர் மாவட்டம்.